30.07.2026

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), இளையோர் செஞ்சிலுவைச் சங்கமும் நாட்டு நலப்பணித்திட்டமும், இணைந்து 30.07.2026 வியாழக்கிழமை அன்று இரத்ததான முகாம் நடத்தியது.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் ஜ.பரசுராமன் கலந்து கொண்டு இரத்தம் கொடுத்த தன்னார்வளர் ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

அவர்தம் உரையில் மனித குருதி எந்த தொழிற்சாலையிலும் செயற்கையாக உற்பத்தி செய்ய முடியாத ஒன்று. ஒருவர் மற்றவர்களுக்கு இரத்தத்தைத் தானமாக வழங்கும்பொழுது பல உயிர்களைக் காப்பாற்ற முடியும். இரத்தம் கொடுப்பதால் குறையாது அது மீண்டும் உற்பத்தியாகும் என்று எடுத்துறைத்தார்.

முன்னதாக புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி இரத்ததான வங்கி அலுவலர் Dr.S.சரவணன் மற்றும் அவரது குழுவினர் இரத்ததானம் பெறும் பணியை மேற்கொண்டனர். இதில் கல்லூரி சார்பாக கலந்து கொண்டவர்கள் 64 அலகு இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்ச்சியைப் புதுக்கோட்டை YRC மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கு.தயாநிதி மற்றும் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் R.மணிமாறன், முனைவர் கி.கோவிந்தன் ஆகியோர் செய்திருந்தனர்.